மாலை முரசு

பக்கங்கள் 20 + 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 22 செவ்வாய்க்கிழமை 24.02.2026 | அதிர்வு 207

## நாடு முழுவதும் தீவிரமடையும் டெங்கு நோய்



***இரு மாதங்களில் 12 ஆயிரம் பேர் பாதிப்பு***

இலங்கையில் இவ் வருடத்தின் முதல் இரண்டு மாதங்களுக்குள் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள 08▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# சஜித் எமது கட்சித் தலைவர் அல்லர்; அவரைக் கட்டுப்படுத்தவே முடியாது!

## மனோ எம்.பி. பகிரங்க அறிவிப்பு

“எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் எமக்கும் இடையிலானது ஒரு தேர்தல் கூட்டணி உடன்படிக்கை மாத்திரமே. அவர் எமது கட்சித் தலைவர் அல்லர். எனவே, அங்கே போகாதீர்கள், இங்கே போகாதீர்கள் என்று சஜித்தை எம்மால் கட்டுப்படுத்த முடியாது.”

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் 08▶

# அட்டகாசம் செய்யும் பாதாளக் குழுக்கள்; கைகட்டி வேடிக்கை பார்க்கும் அநுர அரசு

## ஐக்கிய மக்கள் சக்தி சரமாரி குற்றச்சாட்டு



பாதாள உலகக் குழுக்களை முற்றாக இல்லாதொழிப்போம் என ஒருபுறம் சூளுரைத்து வரும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு, நடைமுறையில் அக்குழுக்களின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்தத் தவறியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. குற்றம் சாட்டியுள்ளார்.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- 08▶



## இலங்கையில் தங்கியிருந்து

# இணையவழி பண மோசடியில் ஈடுபட்ட 16 சீனர்களை மடக்கிப் பிடித்த பொலிஸ்

### சட்டவிரோதப் பொருள்களும் மீட்பு

விசா நிபந்தனைகளை மீறி இலங்கையில் தங்கியிருந்து, இணையதளம் ஊடாகப் பாரிய நிதி மோசடிகளில் ஈடுபட்டு வந்த 16 சீனப் பிரஜைகள் கொழும்பு 07, குருந்துவத்தை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொழும்பு 05, ஜாவத்தை வீதி மற்றும் டொன் கரொலிஸ் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளில் தங்கியிருந்த சீனர்கள் குழுவொன்று, சந்தேகத்துக்கிடமான முறையில் செயற்படுவதாகக் குருந்துவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. இதற்கமைய, குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போதே இவர்கள் அனைவரும் பிடிபட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து மோசடிக்கு பயன்படுத்தப்பட்ட அதிநவீன இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் சட்டவிரோதப் பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

23 மடிக்கணினிகள், 11 கைத்தொலைபேசிகள், 7 ரௌட்டர்கள், 9 குரல் மொழிபெயர்ப்பு இயந்திரங்கள், வரி செலுத்தப்படாத 3 ஆயிரத்து 280 வெளிநாட்டு சிகரெட்டுகள் என்பவையே சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட 16 சீன ஆண்களும் இலங்கையிலிருந்து கொண்டு, வெளிநாடுகளில் உள்ள நபர்களைத் தொடர்பு கொண்டு “பிரிமிட்“ பாணியிலான நிதி மோசடிகளில் ஈடுபட்டு வந்தமை முதற்கட்ட விசாரணைகளில் உறுதியாகியுள்ளது. அத்துடன், இவர்கள் சுற்றுலா விசா நிபந்தனைகளை மீறி நீண்டகாலமாகத் தங்கியிருந்தமையும் கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அவர்களது விசா விவரங்கள் தொடர்பாகக் குடிவரவு குடியகல்வு திணைக்களத்துடன் இணைந்து மேலதிக விசாரணைகளை குருந்துவத்தை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த 15 வயது மாணவன் காலமானார்!

### வவுனியாவில் சோகம்



(கி.வசந்தன்)

வவுனியாவில் புற்றுநோய் பாதிப்பால் சிகிச்சை பெற்று வந்த 15 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வவுனியா, நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வந்த சுரேஸ் ஸர்ணவன் (வயது 15) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த மேற்படி மாணவன், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார். எனினும், நேற்று சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

மாணவன் ஸர்ணவனின் மறைவு குறித்து அவர் கல்வி கற்ற பாடசாலைச் சமூகம் மற்றும் நெளுக்குளம் கிராம மக்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர்.





# வடக்கின் இதயமாக மாறுகின்றது மாங்குளம் 10 ஆண்டுகால அபிவிருத்தித் திட்டம் ஆரம்பம்

## ஆளுநர் தலைமையிலான உயர்மட்டக் கூட்டம்

(பா.சதீசன்)

கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன படுத்தி வடக்கின் மையமாக மாங் குளத்தைக் கட்டியெழுப்புவோம் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேத நாயகன் தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு மற்றும் வவுனியா வடக்கு ஆகிய பிரதேச சபைகளுடன் இணைந்து முன்னெடுக் கப்படும் மாங்குளம் நகர அபிவிருத்தித் திட்டத்தின் (2026 - 2036) உத்தி யோகபூர்வ ஆரம்ப நிகழ்வும், முதலா வது பங்குதாரர்கள் கூட்டமும் புதுக் குடியிருப்பு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர், எமக்குக் கிடைக்கும் அரிய வாய்ப்புகளையும் சந்தர்ப்பங்க ளையும் நாம் உரிய முறையில் பயன படுத்தி, மாகாணத்தின் மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

வாய்ப்புகளைத் தவறவிட்டால் அவை மீண்டும் கிடைக்குமா என்பது கேள்விக் குறியே என்று குறிப்பிட்ட ஆளுநர், எமக்குத் தேவையானவற்றை நாமே கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

"நான் முல்லைத்தீவு மாவட்டச் செயலராகக் கடமையாற்றிய காலத்தில், மாங்குளத்தை வடக்கு மாகாணத்தின் மையமாக அடையாளப்படுத்தி அதற் கான நிலப்பரப்புகளும் ஒதுக்கப்பட்டன. எனினும், அத்திட்டங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. போரின் பின்னர், ஏ-9 பிரதான வீதியில் அமைந்துள்ள மாங்குளம் நகரம் வலு விழந்த நிலையில் காணப்படுவது கவ லைக்குரியது. அதனை மாற்றியமைத்து, நகரத்தை மீளக் கட்டியெழுப்பும் பெரும் முயற்சியின் ஒரு வெளிப்பாடாகவே இத்திட்டம் அமைந்துள்ளது." - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி இயங்கும் வடக்கு மாகாண சபையின் பல திணைக்களங்களை, படிப்படியாக மாங்குளத்தை நோக்கி நகர்த்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஆளுநர் இதன்போது வெளிப்படுத்தினார்.

வடக்கு மாகாணம் வளங்கள் நிறைந் ததாக இருந்தும், வறுமை நிலையில் முன்னிலையில் உள்ள முரண்பாட்டைத் தகர்க்க, நகர அபிவிருத்தி அதிகார சபையின் இத்திட்டம் பெரும் உறுது ணையாக அமையும் என்றும் நம்பிக்கை வெளியிட்ட அவர், தமது கோரிக்கைக்கு அமைவாக இந்தக் கூட்டத்தை விரைவாக ஏற்பாடு செய்த நகர அபிவிருத்தி அதிகார சபையி னருக்குத் தனது விசேட நன்றிகளையும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் ஆரம் பத்தில் வரவேற்புரையாற்றிய நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் திஸாநாயக்க, எதிர்வரும் 10 ஆண்டுகாலத் திட்டத்தைத் தயாரிக்கும் இம்முதலாவது கூட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் தொடர்ச்சி யான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர், கடந்த ஆண்டு சபையைப் பொறுப்பேற்றதன் பின்னர் ஆளுநருடன் இணைந்து மாங்குளம் நகரத்துக்கு மேற்கொண்ட களப் பயணத்தின் தொடர்ச்சியாக இந்நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளமையை வரவேற்றதுடன், அங்குள்ள பஸ் நிலையத்தை மீள இயக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் கருத்துத் தெரிவிக்கையில், மாங்குளம் நகர அபிவிருத்தித் திட்டத் துக்குள் தமது சபைக்குட்பட்ட நான்கு கிராமங்களும் உள்வாங்கப்பட்டுள்ள மையால், அக்கிராமங்களின் வளர்ச் சிக்கு இத்திட்டம் பெரும் வாய்ப்பாக அமையும் என்று நம்பிக்கை வெளி யிட்டார்.

அதேபோன்று, வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளரும், போரால் பாதிக்கப்பட்டு மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள தமது பிரதேச சபையின் நான்கு வட்டாரங்கள் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளமையை வரவேற்று, பிரதேசத்தின் வளர்ச்சிக்கான தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

இதன் பின்னர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் திருமதி கவிதா ஜீவகன், மாங்குளம் நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பான முழுமையான தொழில்நுட்ப விளக்கங் களை வழங்கினார்.

அனைத்துப் பங்குதாரர்கள் மத்தியி லும் அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் குறித்த விழிப் புணர்வை ஏற்படுத்துதல், திட்டமிடல் குழு, பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கிடையில் நெருக்கமான ஒத்துழைப்பை வளர்த்தல், எவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்ற தொலைநோக்குக் கருத்துக்க ளைப் பெறுதல், தற்போதைய சாத்தியக் கூறுகள் மற்றும் பிரச்சினைகளை அடையாளம் காணுதல் மற்றும் எதிர் கால அபிவிருத்தி வாய்ப்புகள் குறித்த ஆரம்ப யோசனைகளைச் சேகரித்தல் ஆகிய உயரிய இலக்குகளை மைய மாகக் கொண்டே இன்றைய கூட்டம் அமைந்திருந்தது.

இந்நிகழ்வில், பிரதேச சபைகளின் கௌரவ தவிசாளர்கள், உறுப்பினர்கள், செயலாளர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபையின் கொழும்பு தலை மைப் பணிமனை மற்றும் வடக்கு மாகா ணப் பணிமனை அதிகாரிகள், ஏனைய தொடர்புடைய அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூக அமைப் புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் பங்கேற்றனர்.









# பன்னிப்பிட்டியவில் அதிகாலை துயரம் கோர விபத்தில் ஒருவர் பலி; மூவர் காயம்

## ஓட்டோவைக் காக்கப் போய் லொறியுடன் மோதிய பஸ்

(க.மகாதேவன்)

கொழும்பு – ஹைலெவல் வீதியின் பன்னிப்பிட்டிய பகுதியில் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்ற கோர விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன், மேலும் மூவர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பன்னிப்பிட்டிய பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து பிரதான வீதிக்குள் நுழைய முயன்ற ஓட்டோ ஒன்றுடன் மோதுவதைத் தவிர்க்க பஸ் சாரதி முயற்சித்துள்ளார். இதன்போது, கட்டுப்பாட்டை இழந்த பஸ், வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் பலமாக மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணித்த நால்வர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர்களில் ஒருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது எனவும், ஏனைய இருவர் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர் எனவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்து காரணமாக ஹைலெவல் வீதியின் போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பன்னிப்பிட்டிய பொலிஸார் முன்னெடுத்து வரு கின்றனர்.



# வீட்டின் மாடியிலிருந்து தவறி விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் பரிதாப மரணம்!

## யாழ்ப்பாணத்தில் சோகம்

யாழ். சுன்னாகம் பகுதியில் வீட்டின் மாடியிலிருந்து தவறி விழுந்த நபர் ஒருவர், சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் – ஊரெழு பகுதியைச் சேர்ந்த வைத்தியலிங்கம் ஜெயச்சந்திரன் (வயது 57) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு அவர் தனது வீட்டின்



மாடியிலிருந்து கீழே இறங்க முற்பட்டபோது, எதிர்பாராத விதமாக கால் தவறி கீழே விழுந்துள்ளார்.

கீழே விழுந்ததில் பலத்த காயமடைந்து மயக்கமடைந்த அவரை, நள்ளிரவு 12 மணியளவில் உறவினர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். எனினும், அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் முன்னரே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டுள்ளார்.






# ஒருபுறம் ஆயிரக்கணக்கானோர் வேலையிழப்பு; மறுபுறம் மதத் தலைவர்கள் அரசால் அவமதிப்பு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கடும் குற்றச்சாட்டு

நாட்டில் ஆயிரக்கணக்கானோர் வேலைவாய்ப்புகளை இழந்து வரும் நிலையில், அரசு மதத் தலைவர்களை அவமதிப்பதிலும் சமூகப் பிளவுகளை ஏற்படுத்துவதிலும் குறியாக இருக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

குப்பியாவத்தை மேற்கு பிரதேசத்தில் நேற்று 700 மாணவர்களுக்குப் பாடசாலைப் பைகள் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் குறிப்பிட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:–

**மதத் தலைவர்கள் மீதான அவமதிப்பு**

“வாக்குகளைப் பெற்று அதிகாரத்திற்கு வந்த அமைச்சர்கள், இன்று மதத் தலைவர்களை விலங்குகளின் பெயர்களால் அழைத்து இழிவுபடுத்துகின்றனர். புத்த சாசனத்தைப் பாதுகாப்பது அரசமைப்பின் கடமை என்றாலும், இன்று அமைச்சர்களே மகா சங்கத்தினரையும், அருட்தந்தையர்களையும் “கேடுகெட்டவர்கள்“ எனச் சமூக வலைதளங்கள் வாயிலாகத் தாக்கி வருகின்றனர். மதமற்ற கொள்கையைப் பிறர் மீது திணிக்கும் இத்தகைய கீழ்த்தரமான சேறு பூசும் நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்.” – என்றார்.



**ஆடைத் தொழிற்சாலைகள் மூடல் மற்றும் வேலையிழப்பு**

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்துப் பேசிய அவர்,

“ஆடைத் தொழிற்சாலைகள் முடக்கம்: ரணசிங்க பிரேமதாஸவினால் உருவாக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலைத் திட்டங்கள் இன்று மூடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

**MAS Holding இல் வேலையிழப்பு**

பாரிய ஆடை உற்பத்தி நிறுவனமான MAS Holding இல் பணியாற்றும் 96 ஆயிரம் பேரில், சுமார் 26 ஆயிரம் பேர் வேலையிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஊழியர் எண்ணிக்கையை 70 ஆயிரமாகக் குறைக்க அந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

**அரசின் இயலாமை**

அமெரிக்க வரிக் குறைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகளைச் சரியாக முன்னெடுக்க இந்த அரசால் முடியாமல் போனதே இந்த வீழ்ச்சிக்குக் காரணம். தொழிற்சாலைகளைத் திறந்த அனுபவம் இல்லாதவர்கள், இன்று அவற்றை மூடிவிட்டுத் தொழிலாளர்களை வீதிக்கு இறக்கியுள்ளனர்.

**எரிவாயு தட்டுப்பாடும் நிர்வாகச் சீர்கேடும்**

நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு நிலவுகிறது என்பதுதான் நிதர்சனமான உண்மை. ஆனால், நாடாளுமன்றத்தில் அது குறித்துப் பேசினால், தட்டுப்பாடு இல்லையென அரசு அப்பட்டமாகப் பொய் கூறி வருகின்றது. இது அரசின் அகம்பாவத்தையும், மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத இயலாமையையுமே காட்டுகின்றது.” – என்றார்.










# பெற்றோரின் கல்விச் சுமையை குறைப்பதே அரசின் நோக்கம்!

## பிரதி அமைச்சர் கௌசல்யா தெரிவிப்பு

பிள்ளைகளின் கல்விக்காகப் பெற்றோர்கள் எதிர்நோக்கும் பாரிய நிதிச்சுமையைக் குறைப்பதில் தற்போதைய அரசு உறுதியாக இருக்கின்றது என்று பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன தெரிவித்தார்.

அரசின் திட்டங்கள் குறித்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பெற்றோர்கள் மீதான நிதி அழுத்தத்தைக் குறைப்பது எமது அரசின் பிரதான கொள்கையாகும். இது எமது பரந்த கல்விச் சீர்திருத்தங்களின் ஒரு முக்கிய அங்கமாகும். இந்தச் சீர்திருத்தங்கள் பொதுக் கல்வியைத் தாண்டி, விசேட கல்வியை வலுப்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்துகின்றன.

மாற்றுத்திறனாளிகள் முழுமையாகச் சமூகத்துடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்பதே எமது இலக்காகும். நாங்கள் எவரையும் பின்னால் விட்டுச் செல்லவில்லை. உரிமை மீறப்பட்ட அனைவரையும் ஒன்றிணைத்து அபிவிருத்தியை நோக்கிச் செல்லும் பயணத்தையே நாம் முன்னெடுத்து வருகின்றோம். அவர்கள் நாட்டின் அபிவிருத்திக்குத் தீவிரமாகப் பங்களிப்பவர்களாக மாற்றப்படுவார்கள்.

கல்வி, சுகாதாரம் மற்றும் பொதுப் போக்குவரத்து ஆகிய துறைகளுக்காகத் தேசிய வரவு - செலவுத் திட்டத்தில் கணிசமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசுக்குள் முடிவுகள் கூட்டாகவே எடுக்கப்படுகின்றன. நாங்கள் தனிப்பட்ட முடிவுகளை எடுப்பதில்லை. ஒரு கூட்டு அரசாவே செயற்படுகின்றோம்." - என்றார்.

# ஏணி முறிந்து விழுந்து முதியவர் பரிதாபப் பலி!

## காவல் குடிசைக்கு ஏற முற்பட்டபோது விபரீதம்

அனுராதபுரம் - கஹடகஸ்திகிலிய பகுதியில் மரம் ஒன்றில் அமைக்கப்பட்டிருந்த காவல் குடிசைக்கு ஏற முற்பட்டபோது, ஏணி முறிந்து கீழே விழுந்ததில் முதியவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்த தெரியவருவதாவது,

நேற்று திங்கட்கிழமை பகல் வேளையில், கஹடகஸ்திகிலிய, மஹாபொத்தானை பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய முதியவர் ஒருவர், மரத்தின் மீது அமைக்கப்பட்டிருந்த காவல் குடிசைக்கு



ஏறுவதற்கு முயற்சித்துள்ளார். இதன்போது, அவர் பயன்படுத்திய ஏணி எதிர்பாராத விதமாகத் திடீரென முறிந்து விழுந்துள்ளது.

ஏணியிலிருந்து கீழே விழுந்தமையால் பலத்த காயமடைந்த அவர், உடனடியாக மீட்கப்பட்டு கஹடகஸ்திகிலிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காகக் கஹடகஸ்திகிலிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து கஹடகஸ் திகிலிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அரிசி 'மாஃபியா'!

கடந்த நவம்பர் இறுதியில் டித்வா சூறாவளியினால் பேரிழப்புகளைச் சந்தித்த விவசாயிகள் - குறிப்பாக கிழக்கு மாகாண வேளாண் பெருமக்கள் - இப்போது மீண்டும் வெள்ள நெருக்கடியை எதிர்கொண்டிருக்கிறார்கள். அறுவடைக்கு தயாரான நெற்கதிர்களும், அறுவடை செய்த நெல்லும் வெள்ளத்தில் மூழ்கி அழியும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விவசாயிகளுக்கு ஆபத்பாந்தவனாக செயல்பட வேண்டிய அரசாங்கம் வெறும் பார்வையாளராக நிற்கின்றது. விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை உரிய விலையில் கொள்வனவு செய்வதற்கு கூட ஒழுங்கு செய்ய முடியாத வக்கற்ற நிலையில் அரசு அந்தரிப்பது வெளிப்படையானது.

மறுபுறம் இந்த விவசாயிகளின் நெல்லை கொள்வனவு செய்து, பாவனையாளர்களுக்கு விற்பனை செய்யும் இடைத்தரகர்களின் 'அரிசி மாஃபியா' கொடிகட்டிப் பறப்பது நிதரிசனமாக வெளிப்படுகின்றது.

இலங்கையின் மிக முக்கியமான அரிசி ஆலை உரிமையாளர்களில் ஒருவரான டட்லி சிறிசேன, சமீபத்தில் வாங்கிய ஓர் உயர் ரக சொகுசுவாகனத்தின்படங்களையும், சிங்கப்பூர் விமானக் கண்காட்சியில் அவர் சுற்றுப்பயணம் செய்து ஹெலிக்கொப்டர்கள் மற்றும் வணிக ஜெட் விமானங்களை ஆய்வு செய்யும் வீடியோவையும் வெளியிட்டபோது, அரிசி விலை உயர்வு மற்றும் சக்திவாய்ந்த தொழில்துறை விண்ணர்களுக்கும் சாதாரண நுகர்வோருக்கும் இடையில் வளர்ந்து வரும் இடைவெளி துலாம்பரமாக வெளிப்பட்டது.

தினசரி உணவுச் செலவுகளை நிர்வகிக்கப் போராடும் பல குடும்பங்களுக்கு, அரிசி வர்த்தகத்துடன் தொடர்புடைய வெளிப்படையான செல்வத்தின் இந்தப் பகட்டு அலப்பறை நிச்சயம் அதிர்ச்சியைத் தந்திருக்கும்.

நாட்டுக்கும் மக்களுக்குமான சோற்றுக்காக ஏழை விவசாயி சேற்றுக்குள் உழன்று மாய, அந்த உற்பத்தியை வாங்கி விற்கும் இடைத்தரகர்கள் ஆடம்பர செல்வாக்கின் உச்சத்தில் கழிபேருவகை கொண்டாடுவது இந்த நாட்டின் சாபமாகவே தென்படுகின்றது.

இந்த நிலைமை, அரிசித் தொழிலில் சக்திவாய்ந்த தனியார் துறை ஜாம்பவான்களுக்கும் சாதாரண நுகர்வோரின் வாழ்க்கை யதார்த்தங்களுக்கும் இடையே வளர்ந்து வரும் தொடர்பை மீண்டும் ஒருமுறை கூர்மையான கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது. அத்துடன் இது விடயத்தில் தொடர்ந்து வந்த அரசாங்கங்களின் தொடர்ச்சியான தோல்வியும் அது அம்பலப்படுத்தி நிற்கின்றது.

பல ஆண்டுகளாக அரிசி விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. நுகர்வோருக்கு எந்த நிவாரணமும் இல்லை. அரசியல் தலைமைத்துவத்தில் மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் - பொதுவாக 'அரிசி மாஃபியா' கட்டுப்படுத்தப்படும் என மீண்டும் மீண்டும் வாக்குறுதிகள் அளிக்கப்பட்ட போதிலும் - அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் சந்தையில் ஒரு சில செல்வாக்கு மிக்க ஆலை உரிமையாளர்கள் ஆதிக்கம் செலுத்த அனுமதித்து, பார்த்து வாளாவிருக்கின்றன என்பதுதான் நிஜம்.

"இந்த அரசாங்கம் இதுவரை 'அரிசி மாஃபியாவை' கட்டுப்படுத்த எதுவும் செய்யவில்லை. இதன் விளைவாக, நுகர்வோர் அதிக விலைகளை செலுத்துகின்றனர்" என்று தேசிய நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே குற்றம் சாட்டுகின்றார்.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் 'அரிசி மாஃபியா'வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க மாட்டாது என்ற அதிருப்திதான் வேளாண் பெருமக்களைப் பெரும் விசனத்துக்குள் ஆழ்த்தியிருக்கின்றது.

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தைத் திருத்துக!

## இலங்கை அரசுக்கு ஐரோப்பிய ஒன்றியம் கடும் அழுத்தம்

இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் (PSTA), 'பயங்கரவாதம்' என்பதற்கான வரைவிலக்கணத்தை சர்வதேச தரத்திற்கு அமையக் குறைக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசுக்குக் கடும் அழுத்தம் கொடுத்துள்ளது.

சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு (PTA) மாற்றீடாகக் கொண்டு வரப்படும் இந்தப் புதிய சட்டமூலம் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்துள்ள பிரதான பரிந்துரைகள் வருமாறு:-

**1. வரைவிலக்கணத்தில் உள்ள ஆபத்து**

தற்போதைய வரைவுத் திட்டத்தில் 'பயங்கரவாதம்' என்பது மிகவும் விரிவாகவும், தெளிவற்ற முறையிலும் வரையறுக்கப்பட்டுள்ளது. இது ஜனநாயக ரீதியிலான அமைதிப் போராட்டங்கள், சிவில் சமூகச் செயற்பாடுகள் மற்றும் மாற்று அரசியல் கருத்துக்களைக் கூட 'பயங்கரவாதக் குற்றங்களாக' வகைப்படுத்த வழிவகுக்கும் என ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது. எனவே, இதனைத் துல்லியமான சர்வதேச நெறிமுறைகளுக்கு ஏற்பச் சுருக்குவது அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

**2. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையும் நிபந்தனையும்**

இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கு மிக அவசியமான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைத் தொடர்ந்து பெறுவதற்கு, மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலான சர்வதேச தரத்திலான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவருவது ஒரு முக்கிய நிபந்தனையாகும். சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படாவிடின் இந்தச் சலுகை பாதிக்கப்படலாம் என்ற எச்சரிக்கையும் மறைமுகமாக விடுக்கப்பட்டுள்ளது.

**புதிய அரசின் நகர்வு**

முன்னைய ரணில் விக்ரமசிங்க அரசின் சட்டமூலத்தைத் தவிர்த்து, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தற்போதைய அரசு புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் குறித்துப் பொதுமக்களின் கருத்துக்களைக் கோரியுள்ளது. சர்வதேச அழுத்தங்களைத் தொடர்ந்து, தற்போது நீதி அமைச்சு பயங்கரவாதக் குற்றங்களின் பட்டியலை மீளாய்வு செய்து வரைவிலக்கணத்தைச் சுருக்கும் பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

குறிப்பாக, தடுத்துவைப்பு அதிகாரங்கள் மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள் புதிய சட்டத்தில் எவ்வாறு மாற்றியமைக்கப்படும் என்பதை சிவில் சமூக அமைப்புகளும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றன.

---

## சஜித் எமது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாஸவின் நகர்வுகள் மற்றும் கூட்டணியின் சுதந்திரத் தன்மை குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**தனித்துவமான கட்சிகள்**

"எமது கட்சி தமிழ் முற்போக்குக் கூட்டணி, சஜித் பிரேமதாஸவின் கட்சி ஐக்கிய மக்கள் சக்தி. இவை இரண்டும் ஒன்றல்ல. ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலான தேர்தல் உடன்பாட்டிலேயே நாம் இணைந்துள்ளோம். அவர் ஐக்கிய மக்கள் கூட்டணி என்ற தேசியக் கூட்டணியின் தலைவரே தவிர, எமது கட்சியின் தலைவர் அல்லர். எனவே, "அங்கே போகாதீர்கள், இங்கே போகாதீர்கள்" என அவரை நாம் கட்டுப்படுத்த முடியாது அவரும் எம்மை அவ்வாறு கட்டுப்படுத்துவதில்லை." - என்றார்.

**ஜே.வி.பியின் கடந்தகால அரசியல் உதாரணம்**

தற்போதைய அரசியல் சூழலை விளக்குவதற்கு ஜே.வி.பியின் கடந்தகால வரலாற்றை உதாரணமாகக் காட்டிய மனோ எம்.பி.,

"2004 இல் சந்திரிகா தலைமையிலான கூட்டணியிலும், பின்னர் 2005 இல் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்கும் அநுர தலைமையிலான ஜே.வி.பி. புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே செயற்பட்டது. அன்று அவர்கள் எப்படி ஒரு கூட்டணியாகச் செயற்பட்டார்களோ, அதேபோன்ற ஒரு நடைமுறையையே இன்று தமிழ் முற்போக்குக் கூட்டணியும் சஜித் தலைமையிலான கட்சியுடன் பின்பற்றி வருகின்றது.

**சிறுபான்மை மக்களின் அரசியல் நிர்ப்பந்தம்**

நாடாளுமன்ற வாக்களிப்பின் போது கூட நாம் சுயாதீனமாக முடிவுகளை எடுக்கின்றோம். நாட்டில் நடைமுறையில் உள்ள தேர்தல் சட்டங்களே இவ்வாறான அரசியல் கூட்டணிகளுக்குக் காரணமாகின்றன.

குறிப்பாக, தென்னிலங்கையில் சிறுபான்மையாக வாழும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்குத் தற்போதைய சூழலில் இத்தகைய கூட்டணிகளைத் தவிர வேறு மாற்று வழிகள் கிடையாது." - என்று மனோ எம்.பி. சுட்டிக்காட்டினார்.

---

## அட்டகாசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"நாட்டின் சட்ட ஒழுங்கு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசு, இன்று பாதாள உலகக் குழுக்களின் கைகளில் சிக்கிக்கொண்டுள்ளது. சட்டத்தரணிகள், அரசியல்வாதிகள், வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பகிரங்கமாகச் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். பாதாள உலகத்தை ஒழிப்பதாகக் கூறும் அரசின் வாக்குறுதி வெறும் மேடைப் பேச்சாகவே முடிந்துவிட்டது.

அண்மையில் தலங்கம பகுதியில் சட்டத்தரணி தம்பதி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஒட்டுமொத்த நீதித்துறையையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. வெளிநாடுகளில் இருந்து கொண்டு பாதாள உலகக் குழுத் தலைவர்கள் இலங்கையில் உள்ள கூலிப் படையினரை இயக்குகின்றனர். இவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் அரசு திணறுவது ஏன்? புலனாய்வுப் பிரிவுகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன?

ஒருபுறம் 'சுத்தமான நாடு' பற்றிப் பேசிக்கொண்டு, மறுபுறம் பாதாள உலகக் குழுக்களின் கொலைக்களமாக இலங்கை மாறுவதற்கு இந்த அரசு இடமளித்துள்ளது. குற்றவாளிகளைக் கூண்டில் அடைப்பதற்குப் பதிலாக, அவர்களைத் தப்பிக்க விடும் அல்லது கட்டுப்படுத்த முடியாத பலவீனமான சூழலே இன்று நிலவுகின்றது. அரசு இந்த விவகாரத்தில் இரட்டை வேடம் போடுவதை நிறுத்திவிட்டு, மக்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

தற்போதைய அநுர அரசு பாதாள உலகக் குழுக்களுக்கு மறைமுகமாகத் துணை போகின்றதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. இல்லையெனில், இவ்வளவு உயர்மட்டப் படுகொலைகள் தொடர்ந்து இடம்பெறுவது எவ்வாறு? நாட்டின் சட்டவாட்சி மற்றும் நீதியை நிலைநாட்டத் தவறிய இந்த அரசுக்கு எதிராக நாம் தொடர்ந்து குரல் கொடுப்போம்." - என்றார்.

---

## நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ஜனவரி மாதம் முதல் இன்று வரை நாடு முழுவதும் 12 ஆயிரத்து 165 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டின் ஏனைய மாவட்டங்களை விடக் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மாத்தறை, காலி மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலும் டெங்கு நோய் பரவல் தீவிரமடைந்துள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில்கொண்டு, அதனைத் தடுப்பதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் அடுத்த மூன்று நாள்களுக்கு இந்த டெங்கு ஒழிப்புத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

சுகாதார அதிகாரிகள் மற்றும் மாநகர சபைப் பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளதுடன், நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதற்கும் அறிவுறுத்தல்களை வழங்கவுள்ளனர்.

டெங்கு பரவலைக் கட்டுப்படுத்தத் தங்கள் வீடுகள் மற்றும் சூழலைத் தூய்மையாக வைத்திருக்குமாறும், நீர் தேங்கி நிற்கும் இடங்களை அகற்றுமாறும் சுகாதாரத் திணைக்களம் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

காய்ச்சல் அறிகுறி தென்பட்டால் உடனடியாகவைத்திய ஆலோசனையைப் பெறுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடத்துக!

## விசேட குழுவிடம் முன்மொழிவைச் சமர்ப்பிக்க எதிர்க்கட்சி முடிவு

நீண்டகாலமாக முடங்கிக் கிடக்கும் மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையிலேயே மிக விரைவாக நடத்துவதற்குத் தேவையான யோசனைகளை நாடாளுமன்ற விசேட குழுவிடம் சமர்ப்பிக்க எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற விசேட குழுவின் முதலாவது அமர்விலேயே இந்த முன்மொழிவைச் சமர்ப்பிக்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் ஒரு சிறிய திருத்தத்தை எளிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதன் மூலம், பழைய தேர்தல் முறையிலேயே தேர்தலை உடனடியாக நடத்த முடியும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்துள்ளார்.

நடப்பு ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் மாகாண சபைத் தேர்தலுக்கான நிதியை அரசு ஏற்கனவே ஒதுக்கியுள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உள்ளதால், தேர்தலுக்கான சட்டப் பின்னணியை உருவாக்குவது இலகுவானது என்றும், அதற்கு எதிர்க்கட்சி முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகள் இன்றி முடங்கிக் கிடப்பதால் அத்தியாவசிய சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் ரஞ்சித் மத்தும பண்டார கவலை வெளியிட்டுள்ளார்.

தேர்தலை நடத்துவதில் அரசுக்கு உண்மையான விருப்பம் இருந்தால், காலதாமதமின்றி அதனை முன்னெடுக்க முடியும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து ஆராய நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற விசேட குழு, இந்த விவகாரத்துக்கு விரைவான தீர்வை வழங்க வேண்டும் என்பதே எதிர்க்கட்சியின் பிரதான கோரிக்கையாக அமைந்துள்ளது.

# காட்டு யானை தாக்கியதில் முதியவர் ஒருவர் உயிரிழப்பு!

## கால்நடைகளை மேய்க்கச் சென்றவருக்கு நேர்ந்த விபரீதம்

மொனராகலை, எத்திமலை – கெம்பிலித்த பகுதியில் காட்டு யானை தாக்கியதில் 63 வயதுடைய முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

எத்திமலை – ஹந்தபாங்கொட பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர், நேற்று திங்கட்கிழமை இரவு கெம்பிலித்த பகுதியில் தனது கால்நடைகளை மேய்த்துக் கொண்டிருந்தார். இதன்போது, அங்கு வந்த காட்டு யானை அவரைத் திடீரெனத் தாக்கியுள்ளது.

இந்தத் தாக்குதலில் அவர் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டு தற்போது எத்திமலை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.



இச்சம்பவம் குறித்து எத்திமலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# பல தொன் பழுதடைந்த சோள விதைகள் சத்துணவுக்கு வந்தனவா எனச் சந்தேகம்!

## மன்னார் சுகாதாரத் துறையினர் விசாரணை

(மன்னார் நிருபர்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி, நடுக்குடா பகுதியில் உரிய அனுமதியின்றி வீதி மற்றும் தனியாருக்கு சொந்தமான காணி ஒன்றில் பழுதடைந்த மற்றும் பூஞ்சை கள் நிறைந்த பல ஆயிரம் தொன் சோள விதைகள் களஞ்சிய படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மன்னார் சுகாதார துறையினர் குறித்த களஞ்சிய சாலை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் நடுக்குடா பகுதியில் சந்தேகத்துக்கு இடமாக அதிகளவான சோள விதைகள் உலர விடப்பட்டுள்ளன என்று பொது மக்கள் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைவாக மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட ஆய்வு நடவடிக்கையின் போது மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற சோள விதைகள் உலர விடப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

அதேநேரம் குறித்த களஞ்சிய சாலைக்கோ அதில் பணியாற்றும் ஊழியர்களுக்கோ எந்த ஒரு சட்ட அனுமதியோ அல்லது சுகாதார மருத்துவ சான்றிதழோ பெறப்படவில்லை என்று முதல் கட்ட விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

அதே நேரம் இவ்வளவு தொகை பழுதடைந்த சோள விதைகள் எவ்வாறு எந்த ஒரு அனுமதியும் இன்றி மன்னார் மாவட்டத்துக்குள் கொண்டு வரப்பட்டது என்பது பற்றியும் இந்த விதைகளை எதற்காக கொண்டு வந்தார்கள் என்பது தொடர்பிலும் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆய்வு செய்து வருகின்றது.

சோள விதைகள் மிகவும் தரம் குறைந்த பழுதடைந்த அதே நேரம் பூஞ்சணம் பிடித்த நிலையில் காணப்பட்டுள்ளது. உரிய சுகாதார வழிகாட்டலைப் பின்பற்றாது உலரவிடப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் முதல் கட்டமாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அதேநேரம் இதனைப் பயன்படுத்தி தரமற்ற சத்துணவு தயாரிப்பதற்கான செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதனை விலங்குகளது உணவாகப் பயன்படுத்தும் வகையில் கூட எந்த ஒரு அனுமதியும் பெறப்படாத நிலையில் நீதிமன்ற அனுமதி பெற்று அதனை அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று சுகாதார துறையினர் தெரிவித்துள்ளனர்.





# பாலமுனை ஹைறமா பள்ளிவாசலின் இரண்டாவது மாடியின் திறப்பு விழா





(திகாமடுல்ல நிருபர்)

பாலமுனையை சேர்ந்த தனவந்தகர் ஏ.எல். இஸ்மாயிலின் சொந்த நிதியிலிருந்து நிர்மாணிக்கப்பட்ட பாலமுனை ஹைமா பள்ளிவாசலின் இரண்டாவது மாடி திறப்பு விழாவும் பொது மக்களிடம் வக்பு செய்து வைக்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றன.

பள்ளிவாசல் தலைவர் ஐ.ஏ.ஸிறாஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட ஜெம்மியத்துல் உலமா சபைத்தலைவர் அஷ்ஷெய்க் ஐ.எல்.எம்.ஹாஸிம் மதனி, தனவந்தகரின் புதல்வர் இஸ்மாயில் ஏ. ஹாதி ஆகியோர் மஃரிப் தொழுகையை தொடர்ந்து வைபவரீதியாக திறந்து வைத்து பொதுமக்களிடம் கையளித்தனர்.

இதன்போது அம்பாறை மாவட்ட ஜெம்மியத்துல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் ஐ.எஸ். எம். ஹாசிம் ஸூரி மதனி, பள்ளிவாசலின் இமாம் ரீ.எல். அஸ்ரப் மௌலவி ஆகியோரால் மார்க்கச் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

இதன்போது பாலமுனை பிரதேச பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், அரபு கால்லூரிகளின் நிர்வாகிகள், அரசியல் பிரமுகர்கள், மஹல்லாவாசிகள், தனவந்தரின் குடும்ப உறவுகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# மலையகம் அப்புத்தளை ஆலயத்துக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்

### 4 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பெயின்ற் வழங்கல்

பதுளை மாவட்டம் அப்புத்தளை பிரதேச செயலக பிரிவில் உள்ள பண்டார எளிய பிரவு, தம்பேத்தன்ன தோட்டம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, சந்நிதியான் ஆச்சிரமத்தால் 4 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பெயின்ற் வழங்கப்பட்டுள்ளது.

இந்த உதவிகளைச் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.





# மண்சரிவால் பாதிக்கப்பட்ட யூரி த.விக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கு நடவடிக்கை!

(நடராஜா மலர்வேந்தன்)

பசறை பகுதியில் அண்மையில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக பாதிப்புக்குள்ளான யூரி தமிழ் வித்தியாலயத்துக்கு புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான பொருத்தமான இடத்தை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த முயற்சியில் பசறை பிரதேச செயலகம், பலாங்கொட பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் யூரி தோட்ட முகாமைத்துவம், பசறை வலய கல்வி பணியகம், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் ஆகியோர் ஒருங்கிணைந்த வகையில் செயற்பட்டு வருகின்றனர்.

மண்சரிவால் ஏற்பட்ட பாதிப்பைத் தொடர்ந்து, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தடையின்றி தொடர வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, பாதுகாப்பான மற்றும் நிலைத்த இடமொன்றைத் தெரிவு செய்யும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. விரைவில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அதிகாரிகளின் மூலம் புதிய கட்டடம் அமைப்பதற்கான தகுந்த இடத்துக்கான தொழில்நுட்ப அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்புக்கும் குறிப்பாக விரைவான நடவடிக்கைகளை முன்னெடுத்த அதிகாரிகளுக்கும் பெற்றோர்கள் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

மாணவர்களின் கல்வி உரிமையைப் பாதுகாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி, உள்ளூர் சமூகத்தின் ஒற்றுமையையும் பொறுப்புணர்வையும் வெளிப்படுத்துவதாக காணப்படுகிறது. அண்மையில் நாட்டின் பிரதமரும் கல்வி அமைச்சருமாகிய ஹரிணி அமரசூரிய குறித்த யூரி தோட்டப் பகுதிகளில் மண்சரிவினால் பாதிப்புக்குள்ளாகிய இடங்களை நேரடி கண்காணிப்பு செய்வதற்கான விஜயம் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.





# பொது மக்கள் பயன்பாட்டு மண்டபம் திறந்து வைப்பு

(நவாஸ்)

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் வேலைத் திட்டத்தின் கீழ், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவால் அமைக்கப்பட்ட பொது மக்கள் பயன்பாட்டு மண்டபத்தைப் பொது மக்கள் பயன்பாட்டுக்குக் கையளிக்கும் நிகழ்வும், அதனுடன் இணைந்து விசேட தேவையுடைய மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்ப பயனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வும் நேற்று சமூக பராமரிப்பு நிலையத்தின் வளாகத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.சி. அஹமட் அப்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு, பொது மக்கள் பயன்பாட்டு மண்டபத்தைக் கையளித்தார்.

இந்த நிகழ்வின் போது இரு பயனாளிகளுக்கு வீட்டு மின் இணைப்புக்காக தலா 63 ஆயிரத்து 461 ரூபா பெறுமதியான காசோலைகளை பிரதேச செயலாளர் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் விசேட அதிதியாக அம்பாறை மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் கே. சிவகுமார், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி எப். நஹீஜா முஸபிர், கணக்காளர் எம் எப். பர்ஹான், நிர்வாக உத்தியோகத்தர் கே. பி. சலீம், சமூக சேவைகள் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம். எம். நசீர் ஆகியோரும், சமூக சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.






# மூதூரில் சுகாதார அதிகாரிகள் அதிரடி சோதனை நடவடிக்கை



(தோப்பூர் நிருபர் எம்.எம்.நெளபீக்)

மூதூர் சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்கு உட்பட்ட மூதூர் நகர் பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை இரவு சுகாதார வைத்திய அதிகாரிகள் குழுவினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு சோதனை நடவடிக்கையின் போது ஹோட்டல்கள், பலசரக்குக் கடைகள் மற்றும் பழக்கடைகள் உள்ளிட்ட பொது மக்களுக்கு உணவு வழங்கும் விற்பனை நிலையங்களில் போதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

திருகோணமலை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் குமார் விக்ரமசிங்க தலைமையிலான குழுவும், மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நூர் முஹம்மது கஸ்ஸாலி தலைமையிலான குழுவும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டன.

இதன்போது சுகாதார விதிமுறைகளை மீறி செயல்பட்ட வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

"தொற்றா நோய்களைத் தடுப்பது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பிரதான பொறுப்பாகும்" என்ற தொனிப்பொருளில், பொதுமக்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்களின் தரம், காலாவதி திகதிகள் மற்றும் தூசி படியும் இடங்களில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்கள் உள்ளிட்டவை கடுமையாக சோதனை செய்யப்பட்டன.

மேலும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களுக்கு எமது நாட்டின் சட்டப்படி காலாவதி திகதி ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் ஏதேனும் ஒன்றில் கட்டாயமாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இறக்குமதியாளர்கள் காலாவதி திகதியை முறையாக குறிப்பிடுதல் அவசியம் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

இவ்வாறு குறிப்பிடப்படாத உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்தால் அதற்கான தண்டனை விதிக்கப்படலாம் என்பதால் வியாபாரிகள் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

இந்தச் சோதனை தொடர்பாக கருத்து தெரிவித்த சுகாதார வைத்திய அதிகாரிகள், சில முடிவுகள் வியாபாரிகளுக்கு வருத்தத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தாலும், மக்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்களின் சுகாதாரத் தரத்தில் எவ்வித சமரசத்துக்கும் தயாரில்லை என வலியுறுத்தினர்.

மேலும், வியாபாரிகளை பாதிப்படையச் செய்வது இந்த நடவடிக்கையின் நோக்கம் அல்ல என்றும், மக்களின் சுகாதார பாதுகாப்பில் உணவு விற்பனையாளர்களும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

நீங்கள் உங்கள் குடும்பத்தினருக்கு வழங்க விரும்பும் சுத்தமான, சுகாதாரமான உணவுகளைப் போலவே, பொது மக்களுக்கும் வழங்குவது உங்கள் கடமையாகும். எமது பிரதேசத்தில் ஏற்படும் பல நோய்களுக்கு சுகாதாரமற்ற உணவுகளே காரணமாக உள்ளன. உணவால் நோய்கள் ஏற்படுவதை சுகாதார அதிகாரிகளாக எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

எனவே, வியாபாரிகள் பொறுப்புணர்ச்சியுடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும், இந்த நடவடிக்கைகள் தவறுகளை உணர்த்தி, ஏனைய வியாபாரிகளையும் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்கத் தூண்டும் என்றும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.



# நிந்தவூரில் கடல் அனர்த்தத்தால் பெரும்பாலான இடங்கள் பாதிப்பு

## அவற்றைப் பார்வையிட்டார் ஆதம்பாவா எம்.பி.

(பாறுக் ஷிஹான்)

நிந்தவூர், அட்டப்பள்ளம் பிரதேசத்தின் கடலனர்த்தத்தால் பாதிப்புற்ற இடங்களை ஆதம்பாவா எம்.பி. நேரில் சென்று பார்வையிட்டு, துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பாரிய கடல் அனர்த்தம் காரணமாக அப்பிரதேசத்தில் உள்ள அதிகமான பொது மக்களின் காணி மற்றும் தென்னந்தோப்புகள் கடலுக்குள் சென்று விட்டன. அதில் ஒருவரின் 5 ஏக்கர் காணி முற்றாக கடலுக்குள் காவு கொள்ளப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அந்தப் பிரதேச தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் வேண்டிக் கொண்டதுக்கு இணங்க, நேற்று திங்கட்கிழமை மாலை அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை அரசியல் பேரவை உறுப்பினரும், கரையோரப் பிரதேசங்களின் அபிவிருத்திக்குழுவின் தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவா மற்றும் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லத்தீப், பிரதேச சபையின் செயலாளர் சிஹாப்தீன், கிழக்கு மாகாண கரையோரம் பேணல் பிரதம பொறியியலாளர் எம். துளஸிதாசன், நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர்களான சம்சுன் அலி, இப்திகார், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் ஆசிரியர் ஆரிப் மற்றும் பிரஜா சக்தி தவிசாளர்கள், பாதிக்கப்பட்ட பயனாளிகள் எனப் பலரும் நேரடி விஜயம் மேற்கொண்டு பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டனர்.

பாதிக்கப்பட்ட இடத்துக்குக் கரையோரம் பேணல் பொறியியலாளரை அவசரமாக அழைத்து இந்த இடத்துக்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எவ்வளவு விரைவாக முன்னெடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாகவும் துரிதமாகவும் முன்னெடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் அறிவுறுத்தியதோடு மட்டுமல்லாமல், இலங்கை கரையோரம் பேணல் திணைக்களத்தின் பிரதம பொறியியலாளரோடும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நிந்தவூர் (அட்டப்பள்ளம்) பிரதேசத்தின் கடலரிப்பு விடயத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளை அவசரமாக முன்னெடுக்குமாறும் பணிப்புரை வழங்கினார்.

இது தொடர்பாக நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கடலரிப்பு சம்பந்தமான விசேடமான கூட்டமொன்றை நடத்துவதற்காக உரிய அமைச்சரோடும் தொலைபேசி மூலம் கலந்துரையாடி விசேட ஒன்றுகூடலை ஏற்பாடு செய்வதற்கும் பணித்தார்.







# விலங்குவழி நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் உயிரிழப்பைத் தவிர்க்கலாம்

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

விலங்குவழி நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து தடுப்பதன் மூலம் சமூகத்தில் ஏற்படும் தேவையற்ற உயிரிழப்புகளைத் தவிர்க்க முடியும் என சுகாதாரத்துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விலங்குவழித் தொற்று நோய்கள் குறித்து விழிப்புணர்வு செயலமர்விலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கல்முனை பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவு மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரான வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் நடைபெற்றது. இந்த செயலமர்வில், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் ஜே.எம். நௌஷாட், பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஐ.றிஸ்னீன், பிராந்திய தர முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ.எம்.ஹில்மி மற்றும் கால்நடை வைத்தியர் எஸ்.எம். நபீர் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

விசர்நாய்க்கடி, எலிக்காய்ச்சல் மற்றும் நிபா வைரஸ் போன்ற நோய்கள் குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது. செல்லப் பிராணிகளுக்கான தடுப்பூசியின் அவசியம் மற்றும் விலங்குகள் கடித்தவுடன் மேற்கொள்ள வேண்டிய முறையான முதலுதவிகள், எலிக் காய்ச்சல் பரவக்கூடிய விவசாயக் குடியேற்றங்கள் மற்றும் தேங்கி நிற்கும் நீர் நிலைகளில் பணிபுரிவோர் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள், வௌவால்கள் கடித்த அசுத்தமான பழங்கள் மூலம் பரவக்கூடிய நிபா வைரஸ் போன்ற ஆபத்துகள் மற்றும் அது குறித்த முன்னெச்சரிக்கைகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

மனிதர்களுக்கு ஏற்படும் பெரும்பாலான தொற்று நோய்கள் விலங்குகளிடம் இருந்தே பரவுகின்றன. தற்கால சூழலில் விலங்குகளுக்கும் மனிதர்களுக்குமான தொடர்பு அதிகரித்து வரும் நிலையில் விலங்குவழித் தொற்று நோய்களுக்கான வாய்ப்புகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இவை குறித்து அனைவரும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.





# கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி

## யாழ். மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான இறுதிக் கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இன்று மாவட்ட செயலக அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் ஆயர் வணக்கத்துக்கு உரிய அருட்தந்தை பி.ஜே.ஜெபரட்ணம், வடமாகாண கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் புடிக்ஹ லியனகமகே, இந்திய துணைத் தூதரக அதிகாரி செல்வி. சி. எஸ். றம்மியா ஆகியோர் பங்குபற்றினர்.

இந்தக் கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய அரச அதிபர், வரலாற்றுச் சிறப்பு மிக்க கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த திருவிழா எதிர்வரும் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதற்கான இறுதிக் கலந்துரையாடலாக இந்தக் கலந்துரையாடல் அமைகிறது. கச்சத்தீவு புனித அந்தோனியார் திருவிழா சிறப்புற அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம் என்று தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து வருகைதரும் பக்தர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கான தங்குமிட வசதிகள், கூடாரங்கள், உணவு வசதிகள், பாதுகாப்பு, சுகாதாரத் தேவைகள், மலசல கூட வசதிகள், குடி தண்ணீர் தேவைகள், பாதுகாப்பு, கடல் மற்றும் தரைப் போக்குவரத்து ஒழுங்குகள், கழிவு முகாமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகள் தொடர்பிலும் அரச அதிபரால் விரிவாக ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளரும் யாழ்ப்பாண மாநகர சபையின் உறுப்பினருமான எஸ். கபிலன், பாதுகாப்பு படைகளின் அதிகாரி லெப். கேணல் கே. எம். சி. எஸ். டி. கருணாதிலக, உதவிப் பொலிஸ் அத்தியகட்சகர் கொ. டி. சில்வா, மேலதிக அரச அதிபர் கே. சிவகரன், மேலதிக அரச அதிபர் (காணி) பா.ஜெயகரன், பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன், உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தாசினி, பிரதேச செயலாளர்கள் (நெடுந்தீவு, வேலணை), வைத்திய அதிகாரிகள், சுங்கத் திணைக்கள அதிகாரிகள், துறைசார் திணைக்களங்களின் தலைவர்கள், படகு உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.










GOLDEN VOICE
OF NORTH
குரல் தேர்வு
விரைவில்...!

# தி.மு.கவின் தொகுதிப் பங்கீடுப் பட்டியல் மார்ச் முதல் வாரத்தில் வெளியிடப்படும்



கூட்டணி கட்சிகளுக்கான தொகுதிப் பங்கீட்டை முடித்து மார்ச் முதல் வாரத்தில் பட்டியலை வெளியிட தி.மு.க. திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதம் நடைபெற உள்ளது. இதையடுத்து மாநாடுகள், தேர்தல் அறிக்கை தயாரிப்பு, விருப்ப மனு விநியோகம் என தேர்தல் பணிகளை ஆளுங்கட்சியான தி.மு.க. முடுக்கிவிட்டுள்ளது. மறுபுறம் கூட்டணிக் கட்சிகளுடனான தொகுதிப் பங்கீட்டையும் நேற்று முன்தினம் 22 ஆம் திகதி தொடங்கி நடத்தி வருகிறது. முதல் நாளில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

தொடர்ந்து 2 ஆவது நாளான நேற்று சென்னை அறிவாலயத்தில் தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையில் 7 பேர் கொண்ட குழு பேச்சுவார்த்தை நடத்தியது. அவர்களுடன் மனிதநேய மக்கள் கட்சி தலைவர் எம்.ஹெச். ஜவாஹிருல்லா தலைமையிலான குழுவினர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அப்போது ம.ம.க. 5 தொகுதிகள் கேட்டதாகவும், தி.மு.க. தரப்பில் 2 ஒதுக்க முன்வந்ததாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து ம.ம.க. தலைவர் ஜவாஹிருல்லா நிருபர்களிடம் கூறும் போது,

"2021 சட்டப்பேரவைத் தேர்தலில் பாபநாசம் மற்றும் மணப்பாறை தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றோம். இந்த முறை 5 தொகுதிகள் வேண்டுமென கேட்டுள்ளோம். கூடுதலாக தொகுதிகளைக் கேட்டாலும் தி.மு.கவின் உதயசூரியன் சின்னத்தில் தான் போட்டியிட உள்ளோம். தி.மு.க. தரப்பில் முதல்வருடன் கலந்து பேசி முடிவெடுப்போம் என தெரிவித்துள்ளனர்" – என்றார்.

இதனைத் தொடர்ந்து நேற்று ம.தி.மு.கவுடனும் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடத்தியது தி.மு.க. இதில் ம.தி.மு.க சார்பில் அவைத் தலைவர் அர்ஜுனராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ம.தி.மு.க. 6 தொகுதிகள் கேட்டதாகவும், கூட்டணியில் புதிய கட்சிகள் இணைந்துள்ளதால் 4 இடங்கள் வரைஒதுக்குவதாக தி.மு.க. தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து ம.தி.மு.க. அவைத் தலைவர் அர்ஜுனராஜ் நிருபர்களிடம் கூறும்போது,

"கூடுதல் தொகுதிகள், தனிச் சின்னத்தில் போட்டி, மாநிலங்களவை இடம் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். எத்தனை இடங்கள் என்பதை பேச்சுவார்த்தை முடிந்த பின்னர் சொல்கிறோம். நாங்கள் போட்டியிடும் தொகுதிகளைக் குறைத்து கொள்ள வேண்டும் என எதுவும் தி.மு.க. தரப்பில் சொல்லவில்லை" – என்றார்.

மக்கள் நீதி மய்யம் கட்சியுடனும் நேற்று தி.மு.க. பேச்சுவார்த்தை நடத்துவதாக இருந்தது. ஆனால், அது 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. தொடர்ந்து, எதிர்வரும் 26 இல் மார்க்சிஸ்ட், 27 இல் இந்திய கொம்யூனிஸ்ட், 28 இல் வி.சி.க. உள்ளிட்ட கட்சிகளுடன் தி.மு.க. பேச்சுவார்த்தை நடத்தவுள்ளன. அனைத்துக் கட்சிகளுடனும் விரைவில் தொகுதிப் பங்கீட்டை இறுதி செய்து, மார்ச் முதல்வாரத்தில் தொகுதிகள் பட்டியலை வெளியிட தி.மு.க. தலைமை திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# தமிழகம் அமைதிப் பூங்காவாகுவதற்கு மீண்டும் அ.தி.மு.க ஆட்சி மலர வேண்டும்

## பழனிசாமி தெரிவிப்பு



"தமிழகம் அமைதிப் பூங்காவாய் திகழ வேண்டும், தமிழகம் பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டும் என்றால் அ.தி.மு.க. ஆட்சி மீண்டும் மலர வேண்டும்."

– இவ்வாறு அ.தி.மு.கவினருக்கு அக்கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி தான் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த நாளை முன்னிட்டு பழனிசாமி அ.தி.மு.கவினருக்கு எழுதி இருக்கும் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, நம் உள்ளங்களிலும், தமிழக மக்களின் நெஞ்சங்களிலும் என்றென்றும் நீக்கமறநிறைந்திருக்கிறார். அவரது பொற்கால ஆட்சியில், பெண்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையிலும், பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும் ஏராளமான திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்.

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலும் எனது தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் மக்கள் நலன் சார்ந்து நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் ஏராளம், ஏராளம். ஜெயலலிதாவுக்குப் பிறகு, நம் இருபெரும் தலைவர்களின் நல்லாசியோடு அ.தி.மு.க. தொடர்ந்து மக்கள் பணிகளை தொய்வில்லாமல் ஆற்றி வருகின்றது.

பெண் கல்வி, பெண் விடுதலை, பெண்களுக்கு சம உரிமை, பெண்களின் பாதுகாப்பு, பெண்களுக்கான சமூகப் பொருளாதார மேம்பாடு ஆகியவற்றில் தனிக் கவனம் செலுத்திய ஜெயலலிதா, பெண்களுக்காகவும், ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிக்காகவும் கொண்டு வந்த அற்புதமான திட்டங்களை எல்லாம் இந்த தி.மு.க. அரசு சீர்குலைத்து நிறுத்திவிட்டது.

நாடாளுமன்ற இரு அவைகளிலும் மிகப் பெரிய எண்ணிக்கையில் உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தாலும், இந்த தி.மு.க. அரசு தமிழக உரிமைகளைக் காப்பாற்றவும், இருமொழிக் கொள்கையை நிலைநாட்டிடவும், திறனற்ற அரசாக இருந்துகொண்டிருக்கிறது. இந்த அலங்கோல ஆட்சியில் நாள்தோறும் தமிழகத்தில் பெண் குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் பெண் காவலர்களுக்கும்கூட பாதுகாப்பற்ற நிலையே நிலவுகிறது.

இந்த அவலங்களை எல்லாம் மாற்ற வேண்டும். தமிழகம் அமைதிப் பூங்காவாய் திகழ வேண்டும், தமிழகம் பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டும் என்றால் அ.தி.மு.க. ஆட்சி மீண்டும் மலர வேண்டும். தமிழக வாக்காளர்கள் ஒவ்வொருவரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். 'எனக்குப் பின்னாலும், இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும், அதிமுக மக்களுக்காகவே இயங்கும்'என்று ஜெயலலிதா சூளுரைத்தார்.

அந்த வெற்றி முழக்கத்தை, செயல்படுத்திட நாம் அனைவரும் உறுதி ஏற்க வேண்டிய நாள்தான் நாம் கொண்டாடும் ஜெயலலிதாவின் பிறந்தநாள். அவரது பிறந்தநாளை கட்சித் தொண்டர்கள், நிர்வாகிகள் அனைவரும் எழுச்சியுடன் கொண்டாட வேண்டும். அந்த எழுச்சி, எதிர்வரும் 2026 தேர்தல் வெற்றியை பிரதிபலிக்கும் வகையில் அமைய வேண்டும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியா – அமெரிக்கா இடையிலான வர்த்தக பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு

## தூதுக்குழுவின் பயணம் தள்ளிவைப்பு



அமெரிக்க உயர் நீதிமன்றத்தின் அண்மைய தீர்ப்பைத் தொடர்ந்து, இந்தியா மற்றும் அமெரிக்கா இடையிலான முக்கிய வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இதனை இந்திய வர்த்தக அமைச்சக அதிகாரி ஒருவர் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த மாத தொடக்கத்தில் அறிவிக்கப்பட்ட இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தின் இறுதி விதிமுறைகளை முடிவு செய்வதற்காக, இந்தியத் தூதுக்குழுவினர் இந்த வாரம் வொஷிங்டனுக்குப் பயணம் மேற்கொள்ள விருந்தனர்.

எனினும், அமெரிக்க உயர் நீதிமன்றத்தின் புதிய தீர்ப்பு மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து இரு நாடுகளும் விரிவான ஆய்வுகளை முன்னெடுத்து வருவதால், இந்தத் தூதுக்குழுவின் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த இடைக்கால ஒப்பந்தம் தொடர்பாக ஏற்கனவே பல முக்கிய கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

அவை முறையே, அமெரிக்காவுக்கு இந்தியா அதிகப்படியான சலுகைகளை வழங்குகிறதா?

ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் கொள்வனவு செய்வதை நிறுத்த இந்தியா இணங்கியுள்ளதா?

அடுத்த ஐந்து ஆண்டுகளில் 500 பில்லியன் டொலர் மதிப்பிலான அமெரிக்கப் பொருள்களை வாங்கும் இலக்கு சாத்தியமா? என்பவையே அந்த கேள்விகளாகும்.

இந்நிலையில், அமெரிக்க விவசாயப் பொருள்களுக்கான இறக்குமதி வரி குறைக்கப்படுவது இந்திய விவசாயிகளைப் பாதிக்கும் என விவசாய சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இருப்பினும், பால் பொருள்கள், மரபணு மாற்றப்பட்ட பொருள்கள் மற்றும் இறைச்சி வகைகளில் எவ்விதச் சலுகைகளும் வழங்கப்படவில்லை என்று வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தெளிவுபடுத்தியுள்ளார்.

முதலில் இந்த ஒப்பந்தம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் அமுலுக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது.

தற்போதைய சூழலால் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுள்ள நிலையில், தூதுக்குழுவின் அடுத்தகட்டப் பயணத்திற்கான புதிய திகதிகள் எவையும் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

# ஒப்பந்தங்களிலிருந்து பின்வாங்கினால் கடுமையான வரிகள் விதிக்கப்படும்

## உலக நாடுகளுக்கு ட்ரம்ப் கடும் எச்சரிக்கை



அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தொடர்ந்து, வர்த்தக ஒப்பந்தங்களிலிருந்து பின்வாங்க முயலும் நாடுகளுக்கு எதிராக இன்னும் கடுமையான வரிகளை விதிக்கப்போம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஆண்டு ட்ரம்ப் விதித்த பெரும்பாலான உலகளாவிய வரிகளை, 1977ஆம் ஆண்டின் சர்வதேச அவசரகால பொருளாதார அதிகாரச் சட்டம் அனுமதிக்கவில்லை எனக் கூறி உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.

நீதிமன்றத் தீர்ப்பைச் சுட்டிக்காட்டி வர்த்தக ஒப்பந்தங்களில் 'விளையாட' நினைக்கும் நாடுகளுக்கு, அவர்கள் ஏற்கனவே ஒப்புக்கொண்டதை விட அதிக வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் சமூக வலைத்தளத்தில் எச்சரித்துள்ளார்.

நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து, ட்ரம்ப் உடனடியாக வேறு சட்டங்களைப் பயன்படுத்தி 10 வீத வரி அறிவித்து, அதனை 15 வீதமாக உயர்த்தியுள்ளார்.

இந்தநிலையில் ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கையை நிறுத்தி வைத்துள்ளது.

மேலும் இந்தியா அண்மைய வர்த்தக உடன்படிக்கையை இறுதி செய்வதற்கான பேச்சுவார்த்தைகளைத் தள்ளிவைத்துள்ளது.

அத்துடன், பிரித்தானியா தனது 10 வீத வரிச் சலுகை ஒப்பந்தம் நீடிக்குமா என்பது குறித்து அமெரிக்காவிடம் விளக்கம் கோரியுள்ளது.

இந்தநிலையில் சட்ட ரீதியான கருவிகள் மாறினாலும், அமெரிக்காவின் வர்த்தகக் கொள்கையில் மாற்றம் இல்லை என அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி ஜேமிசன் கிரீர் தெரிவித்துள்ளார்.



### எப்ஸ்டீன் விவகாரம்:

# அமெரிக்காவுக்கான பிரித்தானியாவின் முன்னாள் தூதுவர் லண்டனில் கைது

அமெரிக்காவுக்கான முன்னாள் பிரித்தானிய தூதுவர் பீட்டர் மெண்டல்சன், பொது அலுவலகத்தில் முறைகேடாக நடந்துகொண்டார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் லண்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சர்ச்சைக்குரிய தொழிலதிபர் மற்றும் பாலியல் குற்றவாளியான மறைந்த ஜெப்ரி எப்ஸ்டீனுக்கும், பீட்டர் மெண்டல்சனுக்கும் இடையிலான நெருங்கிய நட்பு குறித்த விடயங்கள் பிரித்தானிய ஊடகங்களில் வெளியாகத் தொடங்கின.

இவர்களின் நட்பு எந்தளவிற்கு ஆழமானது என்பது குறித்த உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்ததைத் தொடர்ந்து, கடந்த செப்டம்பர் மாதம் அவர் தூதுவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட சில மாதங்களிலேயே, அவர் மீது சுமத்தப்பட்ட முறைகேடு குற்றச்சாட்டுகள் தொடர்பில் லண்டன் பொலிஸார் தற்போது இந்த கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.



கனடா முரசு
செவ்வாய்க்கிழமை 24/02/2026

**ஒன்டாரியோவில் இடம்பெற்ற தீ விபத்தில் சிக்கி ஒருவர் பலி**



C2






# கனேடிய இரட்டைக் குடியுரிமை கொண்டவர்களுக்கு சிக்கலை உருவாக்கிய பிரித்தானியாவின் புதிய விதி

பிரித்தானிய - கனேடிய இரட்டைக் குடியுரிமை கொண்டவர்களுக்கு, பிரித்தானியா அறிமுகம் செய்ய உள்ள விதி ஒன்று சிக்கலை உருவாக்கியுள்ளது.

நாளை பெப்ரவரி 25ஆம் திகதி முதல் பிரித்தானிய - கனேடிய இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள், தங்களிடம் பிரித்தானிய கடவுச்சீட்டு இருந்தால் மட்டுமே பிரித்தானியாவுக்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

கனடாவுக்கு குடிபெயர்ந்து அங்கு வாழ்ந்துவரும் பிரித்தானியர்கள், அவ்வப்போது பிரித்தானியா சென்று தங்கள் உறவினர்களை சந்தித்துவந்த நிலையில், நாளை முதல், அவர்களிடம் பிரித்தானிய கடவுச்சீட்டு இல்லையென்றால் பிரித்தானியாவுக்குள் நுழைய அவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

சாரா பைரன் என்பவர் 1970 களில் கனடாவுக்கு வாழ வந்துவிட்டார். அவரது உறவினர்கள் இங்கிலாந்தில் வாழ்ந்துவருகிறார்கள். குறைந்தது ஆண்டுக்கு ஒருமுறையாவது இங்கிலாந்துக்குச் சென்று அவர்களை சந்தித்துவருவது சாராவின் வழக்கம்.

70 களிலேயே கனடாவில் குடியமர்ந்துவிட்டதால், சாரா காலாவதியான தனது பிரித்தானிய கடவுச்சீட்டை புதுப்பிக்கவில்லை.

இந்த திடீர் மாற்றத்தால், அடுத்த மாதத்திலிருந்து இங்கிலாந்திலிருக்கும் தன் உறவினர்களைக் காணச் செல்வது எப்படி என சாரா குழப்பமடைந்துள்ளார்.

C2

# கனடாவில் வீடு கொள்வனவு பாரிய சவாலாக மாறிவருகிறது






கனடாவில் வீடு கொள்வனவு செய்வது நாளுக்கு நாள் சவாலாக மாறி வருகிறது.

வீட்டு விலைகள் உயர்ந்த நிலையில் தொடர்வதுடன், வீட்டுக் கடன் வட்டி விகிதங்களும் சில ஆண்டுகளுக்கு முன்பைவிட அதிகமாக உள்ளன.

இதனுடன் அன்றாட வாழ்க்கைச் செலவுகளும் குடும்பங்களின் வரவு செலவுத் திட்டத்தை நெருக்கடிக்குள் தள்ளுகின்றன.

நிதி ஆலோசகராக பணியாற்றிய கிறிஸ்டோபர் லிவ், கனடாவில் ஒரு சராசரி வீடு வாங்க எவ்வளவு வருமானம் தேவை என்பதை கணக்கிட்டு விளக்குகிறார்.

கனடிய வீட்டு மனை ஒன்றியத்தின் மதிப்பீட்டின்படி, 2026ஆம் ஆண்டில் கனடாவின் சராசரி வீட்டு விலை சுமார் 698,881 டொலராக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

C2



# ஒன்டாரியோவில் இடம்பெற்ற தீ விபத்தில் சிக்கி ஒருவர் பலி



கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் உள்ள கோர்ட்டீஸ் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஏற்பட்ட வீட்டு தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

டர்ஹம் பொலிஸார் இந்த தகவலை அதிகாரபூர்வமாக வெளியிட்டுள்ளனர். இந்த சம்பவம் இரவு சுமார் 10.30 மணியளவில் நாஷ் மற்றும் வர்கோ சாலைகள் அருகே இடம்பெற்றதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

தீ விபத்து ஏற்பட்ட தொடக்கநிலையில் மீட்பு குழுக்கள் வீட்டுக்குள் நுழைய முடியாமல் இருந்ததாகவும், அப்போது ஒருவர் வீட்டுக்குள் இருந்திருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று திங்கள் கிழமை காலை வெளியிடப்பட்ட புதுப்பிப்பு அறிக்கையில், வீட்டுக்குள் ஒருவர் உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டார் என உறுதி செய்யப்பட்டது.

தீ அணைக்கப்பட்டுள்ளதாலும், சம்பவ இடம் இன்னும் பாதுகாப்பு கண்காணிப்பில் உள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த தீ விபத்தின் காரணம், குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கனடாவில் வீடு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, கனடிய வீட்டு அடமான மற்றும் வீடமைப்பு கூட்டுத்தாபனத்தின் பரிந்துரையின்படி, குடும்பத்தின் மொத்த மாத வருமானத்தின் 30 வீதத்துக்கும் குறைவாகவே வீட்டு செலவுகள் இருக்க வேண்டும் என பரிந்துரைத்துள்ளது.

இதில், வீட்டுக் கடன் தவணை, சொத்து வரி, மின்சாரம் / நீர் போன்ற பயன்பாட்டு கட்டணங்கள், பராமரிப்பு கட்டணங்கள் என்பன உள்ளடங்கும்.

கனடாவில் சராசரி விலையிலான ஒரு வீடு வாங்குவதற்கு, ஆண்டுக்கு குறைந்தபட்சம் 1.6 லட்சம் முதல் 1.8 லட்சம் டொலர் வரையிலான குடும்ப வருமானம் தேவைப்படும் என்பது கணக்குகள் காட்டுகின்றன.

வீட்டு விலைகள், வட்டி விகிதங்கள் மற்றும் வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்துள்ள நிலையில், கனடியர்களுக்கு வீடு வாங்குவது அதிக நிதி திட்டமிடல் மற்றும் கட்டுப்பாட்டைத் தேவைப்படுத்தும் ஒரு பெரிய தீர்மானமாக மாறியுள்ளது.

## கனேடிய இரட்டைக் குடியுரிமை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த திடீர் விதியால் சிக்கலை சந்திக்க உள்ளவர்கள், 800 முதல் 1,000 டொலர்கள் செலவிட்டு, 'certificate of entitlement' என்னும் சான்றிதழை வாங்கவேண்டும் அல்லது தங்கள் கனேடிய குடியுரிமையை துறக்கவேண்டும்.

கனடாவில் வாழும் பிரித்தானியர்கள் பலருக்கு, இரண்டுமே கடினம். 'நான் என்னிடம் உள்ள கனேடிய கடவுச்சீட்டின் உதவியால், உலகம் முழுவதும் பயணிக்கலாம்.

ஆனால், நான் வளர்ந்த என் நாட்டுக்குச் செல்ல எனக்கு அனுமதில்லை', வேடிக்கைதான் என்கிறார் சாரா.

இந்த சிக்கல் சாரா போன்ற சிலருக்கு அல்ல. பிரித்தானியாவில் பிறந்து கனடாவில் வாழ்ந்துவருபவர்கள் எண்ணிக்கை, 460,000க்கும் அதிகம்.

# தீ பரவல் அபாயம் காரணமாக மீளப்பெறப்படும் 'பவர் பாங்'




கனடாவில் சுமார் 20,000 'பவர் பாங்குகள்' தீ பரவும் அபாயம் காரணமாக திரும்பப் பெறப்படுகின்றன என கனடிய சுகாதார திணைக்களம் அறிவித்துள்ளது.

வான்கூவர் தலைமையிடமாகக் கொண்ட LOGiiX நிறுவனம், சீனாவில் தயாரிக்கப்பட்ட தனது பிஸ்டன் பவர் 5000 மெக் பவர் பாங்க் Piston Power 5000 Mag Power Bank சாதனங்களை திரும்பப் பெறுகிறது.

அறிவிப்பின்படி, "சில 'பவர் பாங்குகள்' 'மொபைல்' சாதனங்களை 'சார்ஜ்' செய்யும் போது அல்லது தானே 'சார்ஜ்' ஆகும் போது அதிக வெப்பமடைந்து தீ பரவல் அபாயத்தை ஏற்படுத்தக்கூடும்" என எச்சரிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 9 ஆம் திகதி நிலவரப்படி, கனடாவில் நான்கு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. எனினும், இதுவரை எவருக்கும் காயம் ஏற்பட்டதாக தகவல் இல்லை.

2022 ஜனவரி முதல் 2025 ஜூலை வரை விற்பனை செய்யப்பட்ட பின்வரும் மாடல்கள் திரும்பப் பெறப்படுகின்றன:

- LGX-13302 – கருப்பு
- LGX-13303 – வெள்ளை
- LGX-13304 – நேவி / மிட்நைட் ப்ளூ
- LGX-13839 – லாவெண்டர்
- LGX-13840 – பிளஷ் மாடல் எண்,

பொருளின் பேக்கேஜ் கீழ்பகுதியில் பார்கோடு மேல் பகுதியில் காணப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயனாளர்கள் உடனடியாக இந்தப் பொருட்களை பயன்படுத்துவதை நிறுத்தி, மாற்று பவர் பாங்கைப் பெற LOGiiX நிறுவனத்தை தொடர்புகொள்ளுமாறு கனடிய சுகாதார திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

மேலும், லித்தியம்-அயன் பேட்டரிகளை பாதுகாப்பாக எடுத்துச் செல்லவும் அகற்றவும் தொடர்புடைய நகராட்சி நிர்வாகத்திடம் ஆலோசனை பெறவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.




# நகை அபகரிப்பு சம்பவங்கள் குறித்து யோர்க் பிராந்தியத்தில் எச்சரிக்கை

கனடாவின் யோர்க் பிராந்தியத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் நகை அபகரிப்புகள் குறித்து பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒரே சந்தேக நபர்கள் மார்க்ஹாம் பகுதியில் இந்த சம்பவங்களில் ஈடுபட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் குடியிருப்பு பகுதிகளில் வாகனத்தில் சுற்றித் திரிந்து, தெளிவாக நகை அணிந்தும் தனியாகவும் இருக்கும் நபர்களைத் தேடி இலக்காக்குகின்றனர். குறிப்பாக முதியவர்களே அதிகமாக குறிவைக்கப்படுகின்றனர்.

பாதிக்கப்பட்ட நபரை கண்டறிந்த பிறகு, சந்தேக நபர் அவர்களிடம் நடந்து சென்று அல்லது வழி கேட்பது போன்ற காரணம் கூறி வாகனத்துக்கு அழைத்து செல்வார்.

குறுகிய உரையாடலின் போது, பாதிக்கப்பட்டவரின் உண்மையான நகையை கழற்றி, அதன் பதிலாக போலியான தங்க வளையல், மோதிரம் அல்லது சங்கிலி போன்றவற்றை அணிவித்து விட்டு தப்பிச் செல்கிறார்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரு பெண் சந்தேக நபர், கடை ஒன்றின் கார் நிறுத்துமிடங்களில் பாதிக்கப்பட்டவர்களை அணுகி உரையாடலைத் தொடங்கி, போலியான தங்க நகைகளை வழங்க முயன்றுள்ளார் என கூறப்படுகிறது.

பின்னர், அவர் திருட்டை நிகழ்த்தியதும் காத்திருந்த சாம்பல் நிற கார் ஒன்றில் ஏறி, சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவங்களில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக நெருங்கி நின்று வழி கேட்பவர்கள் போன்றோரிடம் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.